சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP NO. **178 / 2021**

பெயர்: தமிழ்மோகன் ம.சா. 1 தேதி **25.06.2026**

இரண்டாவது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

1. நான் ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் யார் என்றால் எனது அண்ணன் கார்த்திக். மேற்படி இருசக்கர வாகனத்தை நான் ஓட்ட எனது நண்பர் பிரபாகரன் பின் இருக்கையில் அமர்ந்து வந்தார். நாங்கள் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி சென்றோம். மேற்படி நான் ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்திற்கு காப்பீடு இல்லை என்றால் எனக்கு தெரியாது. எனக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது. முதல் எதிர்மனுதாரரின் வாகனமானது வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்தது. மேற்படி சாலையானது கிழமேல் சாலை என்றால் அது மேல் நோக்கி செல்லும் சாலையாகும். மலை பிரதேசம் என்பதால் திசையை என்னால் கூற இயலாது. நான் விபத்து நடைபெற்றது கிழமேல் சாலை என்கின்ற நிலையில் தென்வடல் சாலை என்று மாற்றி கூறுகிறேன் என்றால் சரியல்ல. முதல் எதிர்மனுதாரர் மினி டோர் ஆட்டோ வாகனத்தை பெட் போர் - குன்னூர் நோக்கி சாதாரண வேகத்தில் தான் ஓட்டி வந்தார் என்றாலும், நான் தான் இருசக்கர வாகனத்தை அதிவேகமாவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி விபத்தை ஏற்படுத்திவிட்டேன் என்றால் சரியல்ல. முதல் எதிர்மனுதாரர் மீது எவ்வித தவறும் இல்லாததால் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. என்னுடைய வாகனத்தை அதிவேகமாக ஓட்டியதால் நான் பயணித்த வாகனத்தின் ஓட்டுநர் மற்றும் காப்பீட்டாளர் அவசிய தரப்பினர் என்றால் சரியல்ல. நான் மாதம் ரூ.35,000/- பெறுவதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் சாலை விபத்திற்கு பின்னர் எனக்கு ஏற்பட்ட காயங்களுக்கு எந்த மாதிரியான சிகிச்சை மேற்கொண்டேன், எவ்வளவு செலவு செய்தேன் என்கின்ற சங்கதியை பொறுத்து மனுவிலோ, முதல் விசாரணையிலோ கூறவில்லை என்றால் சரியல்ல.

2. நான் சிகிச்சை பெற்றதாக கூறக்கூடிய மருத்துவமனையில் எவ்வளவு நாட்கள் சிகிச்சை பெற்றுக்கொண்டேன் என குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். நான் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றதாக கூறுவது உண்மையில்லை என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்றால் சரியல்ல. முதல் எதிர்மனுதாரர் மினி டோர் ஆட்டோ ஓட்டுவதற்கு உரிமம் இல்லை என்றால் எனக்கு தெரியாது. உரிய ஓட்டுநர் உரிமம் இல்லாமல் மினி டோர் ஆட்டோவை ஓட்டியது சாலை விதிமுறைகளுக்கு முரணானது என்றால் சரியல்ல. எனவே, மனுவானது இரண்டாவது எதிர்மனுதாரருக்கு

எதிராக தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. முதல் எதிர்மனுதாரர் வாகன ஓட்டியின் மீதான குற்ற வழக்கு என்ன ஆனது என்றால் அவர் தண்டனை பெற்றுவிட்டார், ஆனால் நான் தாக்கல் செய்த முதல் விசாரணையில் வழக்கானது நிலுவையில் உள்ளதாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது. முதல் எதிர்மனுதாரர் தண்டனை பெற்றுவிட்டார் என கூறுவது உண்மையில்லை என்றால் சரியல்ல. மேற்படி விபத்தினால் எனக்கு இழப்பு எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் விபத்து நடைபெற்ற சமயத்தில் கைரேகை நிபுணர் பிரிவில் பணிபுரிந்தேன், தற்பொழுது காவல் நிலையத்தில் பணிபுரிந்து வருகிறேன். எனக்கு சம்பளத்தில் எதுவும் வேறுபாடு இல்லை.

மறுவிசாரணை - இல்லை

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN

சார்பு நீதிபதி

குளித்தலை.